# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 12: தேசத்திற்கு ஓய்வு

**2நாளாகமம் 36:11-21**

### நடந்த கதை . . .

பரிபூரண சமநிலையுடன் உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. அப்போது மனிதன், மிருகங்கள், செடிகள் நடுவே பூரண இசைவு இருந்தது. பாவம் வந்தபோது, எல்லாம் மாறியது. மிருகங்களை மனிதன் உண்ண ஆரம்பித்தான்; மிருகங்கள் ஒன்றையொன்று உண்ண ஆரம்பித்தன. எங்கும் முள்ளும் குருக்கும் முளைத்தது. பாவத்தின் கேடு, மண்வளத்தைக்கூடப் பாதித்தது.

'நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது' என்று காயீனிடம் தேவன் சொன்னார். ஆதி 4:12.



ஏழு வருடங்களுக்கு ஒருமுறை நிலங்களை ஓய்வாகவிடும்படி இஸ்ரவேல் புத்திரரிடம் தேவன் கட்டளையிட்டதற்கு இதுவும் ஒரு காரணம். யாத் 23:10,11. மண் வளத்தை மீண்டும் பெறுவதற்கும், அதில் தானாக முளைக்கும் பயிர்களால் ஏழைகள் பயனடைவதற்கும் அது ஒரு வாய்ப்பாக அமைந்தது. ஆனால் தேவமக்கள் பலர் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. அப்போதுதான் அவர்கள் தண்டனைக்கு ஆளானார்கள். பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவிற்கு வந்து, தனக்கு எதிராகக் கலகம்செய்தவர்களை எல்லாம் கொன்றுபோட்டார். மற்றவர்கள் பொன்னகரான பாபிலோனிற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அதேசமயம் 'தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும்' இஸ்ரவேல் பாழாய்க்கிடந்தது. 70 வருடங்கள் முடிவடைந்தபிறகு, தப்பினவர்கள் கானானுக்குத் திரும்பி, வாக்குத்தத்த தேசத்தைப் பண்படுத்தினார்கள்; எருசலேமைத் திரும்ப எடுத்துக்கட்டினார்கள்.

இப்போது 6000 வருடங்கள் கடந்துவிட்டன; சுவிசேஷ விதையை இயேசு விதைத்துவருகிறார். 'கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போல இருக்கிறது' என்று வேதாகமம் கூறுகிறது. 2பேதுரு 3:8.

உலகத்தை அறுவடைசெய்ய இயேசு சீக்கிரம் வருவார். அவருடைய வருகையின் பிரசன்னத்தால் சிலர் மடிந்துபோவார்கள்;மற்றவர்கள் பொன்னாலான அவருடைய ராஜ்யத்திற்குக் கொண்டுசெல்லப்படுவார்கள். அப்போது, களைப்படைந்திருக்கும் இந்தக் கிரகமானது 1000 வருட ஓய்வை அனுபவிக்கும்.

## ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

### 1. 1000 வருடத்தின் ஆரம்பத்தைச் சுட்டிக்காட்டும் நிகழ்ச்சிகள் என்ன?

**1தெசலோனிக்கேயர் 4:16.** ________________தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து ________________; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் ______________ எழுந்திருப்பார்கள்.

**வெளிப்படுத்தல் 20:4,5.** அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ______________ வருஷம் அரசாண்டார்கள். மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே ________________ உயிர்த்தெழுதல்.

**குறிப்பு:** வெளிப்படுத்தல் 20இல் சொல்லப்படும் ஆயிரம் வருடங்கள்தாம் ஆயிர வருட அரசாட்சி என்று அழைக்கப்படுகிறது. இயேசுவின் இரண்டாம் வருகையில் நீதிமான்கள் உயிர்த்தெழுப்பப்படும் காலக்கட்டம்தான் ஆயிரவருட அரசாட்சியின் ஆரம்பம். எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த பரிசுத்தவான்கள் (வச 6இல், 'பாக்கியவானும் பரிசுத்தவானும்' என்றழைக்கப்படுகிறார்கள்) இந்த முதலாம் உயிர்த்தெழுதலில் உயிர்த்தெழுவார்கள்.

### 2. முதலாம் உயிர்த்தெழுதலின்போது வேறு என்ன நிகழும்?

**1 கொரிந்தியர் 15:51,52.** நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் ____________________________. எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்.

**பிலிப்பியர் 3:21.** நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய _________________ சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

**2தெசலோனிக்கேயர் 2:8.** அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே _________________.

**வெளிப்படுத்தல் 16:18,20,21.** பூமி மிகவும் _________________, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை ... தீவுகள் யாவும் அகன்றுபோயின; பர்வதங்கள் காணப்படாமற்போயின. தாலந்து நிறைய (சுமார் 75 பவுண்டுகள்) பெரிய __________________ வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது.

**வெளிப்படுத்தல் 20:1,2.** ஒரு தூதன் .. பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் __________________வைத்(தான்).

**குறிப்பு:** ஆயிரவருட அரசாட்சி துவங்கும்போது நடக்கும் நிகழ்ச்சிகள்பற்றிச் சுருக்கமாக அறிய, இந்தப் பாடத்தின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ள 1000 வருட அட்டவணையைப் பார்க்கவும்.

### 3. இரண்டாம் உயிர்த்தெழுதலில் உயிரோடு எழும்பப்போகிறவர்கள் யார்? அது எப்போது நடைபெறும்?

**யோவான் 5:28,29.** பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், __________ செய்தவர்கள் _________________ அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.

**வெளிப்படுத்தல் 20:5.** மரணமடைந்த மற்றவர்கள் (துன்மார்க்கர்) அந்த ஆயிரம் வருஷம் __________________ உயிரடையவில்லை.

**குறிப்பு:** ஆயிரம் வருட அரசாட்சியின் முடிவில் நடக்கும் இரண்டாம் பொதுவான உயிர்த்தெழுதலில் துன்மார்க்கர் உயிரோடு எழுப்பப்படுவார்கள்.



### 4. அந்த ஆயிரம் வருடமளவும் பூமியின் நிலை என்ன?

**ஏசாயா 24:1.** இதோ, கர்த்தர் தேசத்தை ______________ பாழுமாக்கி, அதைக் கவிழ்த்து, அதின் குடிகளைச் சிதறடிப்பார்.

**எரேமியா 4:23-26.** பூமியைப் பார்த்தேன், அது ______________ வெறுமையுமாயிருந்தது; வானங்களைப் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது. பர்வதங்களைப் பார்த்தேன், அவைகள் அதிர்ந்தன; எல்லாக் குன்றுகளும் அசைந்தன ... மனுஷனில்லை. கர்த்தராலும், அவருடைய உக்கிரகோபத்தாலும் பயில்நிலம் வனாந்தரமாயிற்று; அதின் _________________ளெல்லாம் இடிந்துபோயின.

**எரேமியா 25:33.** அக்காலத்தில் பூமியின் ஒரு முனை துவக்கிப் பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் _________________ கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் _________________ பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்.

**குறிப்பு:** இயேசுவின் இரண்டாம் வருகையின்போது நிகழும் பூமியதிர்ச்சியும் சூறாவளியும் பூமியை முற்றிலும் நாசப்படுத்திவிடும். எங்கும் முற்றிலும் அந்தகாரமாக இருக்கும். பூமியின் நெடுகிலும் மரித்தவர்கள் கிடப்பார்கள்; யாரும் உயிரோடு இல்லாததால் அங்குப் புலம்பல் இருக்காது. நீதிமான்கள் அனைவரும் பரலோகத்தில் இருப்பார்கள்; துன்மார்க்கர் அனைவரும் மரித்திருப்பார்கள். (சிறப்பு ஆராய்ச்சியில் 'பாதாளம்' எனும் தலைப்பின்கீழ் உள்ளதை வாசியுங்கள்).

### 5. 1000 வருடம் முழுவதும் பரிசுத்தவான்கள் எங்கு இருப்பார்கள்? அப்போது என்ன செய்வார்கள்?

**யோவான் 14:3.** நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, _________ இருக்கிற ____________________ நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.

**வெளிப்படுத்தல் 20:4.** நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு ______________ அளிக்கப்பட்டது ... அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.

**1கொரிந்தியர் 6:2,3.** ____________________ உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? ... தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா?

**குறிப்பு:** ஆயிரவருடம் முழுவதும் பரிசுத்தவான்கள் பரலோகத்தில் நியாயவிசாரணை செய்வார்கள். யார் இரட்சிக்கப்பட்டவர், யார் இரட்சிக்கப்படாதவர் என்பதை அவர்கள் தீர்மானிப்பதில்லை. அதை ஏற்கனவே தேவன் தீர்மானித்திருப்பார். தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் சரியானவை என்றுமாத்திரம் அவர்கள் தீர்மானிப்பார்கள். 'உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின.' வெளி 15:4. துன்மார்க்கருக்கு தேவன் கொடுக்கும் தண்டனையும், நீதிமான்களுக்குக் கொடுக்கும் பிரதிபலனும் நியாயமானவை என்று ஒத்துக்கொள்வார்கள். (வெளி 22:11,12). பரிசுத்தவான்கள் உண்மையைப் புரிந்துகொள்ள நியாயவிசாரணையின் இந்தக் காலக்கட்டம் உதவுகிறது. உதாரணமாக, நீங்கள் பரலோகத்திற்குப் போகிறீர்கள், அங்கு உங்களுக்குப் பிடித்தமான போதகர் இல்லை; ஆனால், பிரபலக் குற்றவாளி ஒருவன் அங்கிருக்கிறான்! அதற்கு நிச்சயம் உங்களுக்கு விளக்கம் தேவைப்படும். பதிவுப் புத்தகங்களைக் காட்டி, சந்தேகங்கள் அனைத்தையும் தூதர்கள் போக்குவார்கள். அந்த நியாயவிசாரணையின் காலக்கட்டம் முடிவடையும்போது தேவனுடைய அன்பையும், நியாயத்தையும், அனைவரையும் பாரபட்சமின்றி நடத்தியிருப்பதையும் முழுவதும் புரிந்துகொள்வார்கள். 'அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்' என்று அவர்கள் சொல்வார்கள். வெளி 19:2. (சிறப்பு ஆராய்ச்சியில் '1000–வருட அட்டவணை' எனும் தலைப்பின் கீழுள்ளதை வாசிக்கவும்).

### 6. ஆயிர வருட முடிவில் என்னவாகும்?

**சகரியா 14:1,4,5,9.** இதோ, கர்த்தருடைய நாள் வருகிறது ... அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ______________ ______________மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம் ... என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள். அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்.

வெளிப்படுத்தல் 21:2. யோவானகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு ______________ கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

**குறிப்பு:** 1000 வருடத்தின் முடிவில், புதிய எருசலேமானது பரிசுத்தவான்களோடுகூட பரலோகத்திலிருந்து இறங்கிவந்து, இப்போதுள்ள ஒலிவமலைமேல் வைக்கப்படும். நகரம் வந்து இறங்குவதற்கு ஏதுவாக, அந்த மலையைத் தட்டி, ஒரு பெரிய சமவெளியை ஆண்டவர் உண்டாக்குவார்.

### 7. கட்டிவைக்கப்பட்டிருக்கும் சாத்தான் அவிழ்த்துவிடப்படும்படி அடுத்து என்ன நிகழும்?

வெளிப்படுத்தல் 20:5,7. மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை ... அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து ______________.

**குறிப்பு:** துன்மார்க்கர் உயிர்த்தெழுந்தவுடன், அவர்களை வஞ்சிக்கவும், தன் இஷ்டப்படி ஆட்டிப் படைக்கவும் சாத்தான் மீண்டும் முயலுவான்.

### 8. துன்மார்க்கர் உயிரோடு எழுப்பப்பட்டதும் சாத்தான் என்ன செய்வான்?

வெளிப்படுத்தல் 20:8,9. பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் ______________ படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கிறது. அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது.

**குறிப்பு:** தான் அநியாயமாக பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டதாகவும், எல்லாரும் சேர்ந்து நகரத்தைப் பிடித்து, தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடலாம் என்றும் சாத்தான் மக்களை வஞ்சித்து, அவர்களை நம்பவைப்பான். தாங்கள் பரிசுத்த நகரத்திற்கு வெளியே இருப்பதை உணர்ந்ததும், புதிய எருசலேமின்மேல் தாக்குதல் நடத்தி, அதைப் பிடிக்க துன்மார்க்கர் ஒன்று சேருவார்கள்.

### 9. இந்தப் பரபரப்பான சூழலில், எல்லாவற்றிற்கும் எவ்வாறு முற்றுப்புள்ளி வைக்கப்படும்?

வெளிப்படுத்தல் 20:11,12. பின்பு, நான் பெரிய ______________ ______ ______________ அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன் ... அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள்தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக ______________.

**குறிப்பு:** உடனே, நகரத்திற்கு மேல் பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனம் தோன்றும்; நியாயத்தீர்ப்பின் இறுதிக்கட்டம் ஆரம்பிக்கும். அப்படியாக, தேவனுடைய நகரத்தின் மேலான தாக்குதல் உடனடியாக நிறுத்தப்படும். புத்தகங்கள் திறக்கப்படும்; ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் அவனுக்குமுன்பாக திரைப்படம்போல் ஓடும். துன்மார்க்கரும், நீதிமான்களும் ஒன்றையும் விடாமல் பார்க்கமுடியும். லூக்கா 12:2,3.

### 10. துன்மார்க்கர் நியாயத்தீர்ப்படைந்தபின்னர் என்ன நிகழும்?

ரோமர் 14:11. முழங்கால் ______________ எனக்கு முன்பாக ______________, நாவு யாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய் கர்த்தர் சொல்லுகிறார்.

பிலிப்பியர் 2:10,11. இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக ______________ கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் ______________, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.



வெளிப்படுத்தல் 19:1,2. பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன் ... அவருடைய ______________ சத்தயமும் ______________.

**குறிப்பு:** தேவன் நீதியோடு நியாயமாக நடந்ததையும், தங்களை இரட்சிக்க அவர் எவ்வளவோ முயற்சித்தும் தாங்கள் அவரை மறுதலிக்கவும், பாவ வாழ்க்கை வாழத் தீர்மானித்ததையும் துன்மார்க்கர் மனதார ஒத்துக்கொள்வார்கள். எல்லாரும் அவ்வாறு ஒத்துக்கொண்டபின், பாவப் பிரச்சனை நிரந்தரமாகத் தீர்க்கப்படும்; பாவிகளை அழிப்பதே பாதுகாப்பானதாக இருக்கும்.

### 11. அடுத்து என்ன நடக்கும்?

வெளிப்படுத்தல் 20:9. தேவனால் வானத்திலிருந்து ______________ இறங்கி அவர்களைப் ______________.

வெளிப்படுத்தல் 20:15. ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் ______________ கடலிலே தள்ளப்பட்டான்.

**குறிப்பு:** தேவனுடைய அக்கினி துன்மார்க்கர்மேல் விழுந்து, தேவனுடைய நகரத்தைச் சுற்றிலும் பெரிய அக்கினிக் கடலாகக் காட்சியளிக்கும். அந்த அக்கினியானது அவர்களைச் சாம்பலாக்கிபோடும். மல்கியா 4:3. நரகம் என்றழைக்கப்படும் அக்கினியின்மேல் சாத்தானுக்கு அதிகாரம் இருக்காது. மாறாக, அவனும் அவனுடைய தூதர்களும் அந்த அக்கினியில் தண்டனைபெற்று, சாம்பலாவார்கள். (வெளிப்படுத்தல் 20:10; எசேக்கியேல் 28:18). இரண்டாம் மரணமாகிய அந்த அக்கினியிலிருந்து உயிர்த்தெழுதலே கிடையாது. வெளிப்படுத்தல் 20:14.

### 12. அக்கினிவந்து பட்சித்தபிறகு, தேவன் தம் மக்களுக்காக என்ன செய்வார்?

ஏசாயா 65:17. நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் ______________.

2பேதுரு 3:13. அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே ______________ வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.

**குறிப்பு:** 70 வருடப் பாபிலோனியச் சிறையிருப்பு முடிந்தபிறகு, இஸ்ரவேல் புத்திரர்கள் வாக்குத்தத்த தேசத்திற்குத் திரும்பி, நகரத்தைத் திரும்பக்கட்டினார்கள். ஆயிர வருட அரசாட்சிக்குப் பிறகு, இயேசுவானவர் புதிய வானத்தையும் (ஆகாயத்தையும்), பூரண உலகையும் படைப்பார்; அதைப் பரிசுத்தவான்கள் காண்பார்கள்; அங்குப் பாவம் மீண்டும் தலைதூக்குவதில்லை. நாகூம் 1:9. பாவத்தால் ஆதாமும் ஏவாளும் இழந்த பரதீசானது, ஏதேனின் சகல மகிமையோடும் மீண்டும் கிடைக்கும். சமாதானமும் சந்தோஷமும் அன்பும் பரிபூரண மகிழ்ச்சியும் தேவ மக்கள்மேல் என்றென்றும் தங்கியிருக்கும்!

### 13. தேவனும் நீதிமான்களும் இறுதியில் வாசஞ்செய்யும் இடம் எது?

வெளிப்படுத்தல் 21:3. இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, ______________ அவர் ______________.

மத்தேயு 5:5. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ______________ சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

**குறிப்பு:** தேவனாகிய பிதாவும், தேவனாகிய குமாரனும் புதிய பூமியில் தங்கள் பரிசுத்தவான்களுடன் வாழப்போகிறார்கள். உங்களுக்கு அருகில் தேவன் இருக்கப்போகிறார்; நினைத்தாலே மனம் சிலிர்க்கிறதா?

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

யோவான் 14:2. 'ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்' என்று இயேசு சொல்கிறார். பரிசுத்த நகரத்தில் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை அவர் வைத்திருக்கிறார். அவர் உங்களை மறுபடியும் பிறக்கச்செய்து, அவருடைய ராஜ்யத்திற்காக உங்களை ஆயத்தப்படுத்தி, உங்களுக்குத் தரப்போகும் நித்தியஜீவனை ஏற்றுக்கொள்வீர்களா?

**பதில்:** ______________________________



# துணைப்பகுதி

**மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.**

### 1000 வருட அட்டவணை

**1000 வருட அரசாட்சியின் துவக்கத்தில் நடக்கும் நிகழ்வுகள்**

1. இயேசு பரிசுத்தவான்களை அழைத்துச்செல்ல வருகிறார்; மரித்த நீதிமான்கள் உயிர்த்தெழுவார்கள்.
2. ஆண்டவரின் வருகை துன்மார்க்கரை அழிக்கும்; பூமி அதிர்ச்சி, கல்மழை உண்டாகும்.
3. உயிருள்ள நீதிமான்கள் மறுரூபமாக்கப்பட்டு, ஆண்டவரைச் சந்திக்க எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.
4. நீதிமான்கள் மேகங்களில் பரலோகம் செல்கிறார்கள்.

1000 வருடங்கள்

**1000 வருட அரசாட்சியில் காணப்படும் சூழ்நிலைகளும் நிகழ்வுகளும்:**

1. பரலோகத்தில் துன்மார்க்கரை நீதிமான்கள் விசாரிக்கிறார்கள்.
2. முற்றிலும் அழிந்து, இருளில் இருக்கும் பூமியில் சாத்தானும் அவனுடைய தூதர்களும் இருப்பார்கள்.
3. பூமியில் எவரும் உயிரோடு இல்லை.

**1000 வருட முடிவின் நிகழ்வுகள்**

1. இயேசு தம் பரிசுத்தவான்களோடு வருவார்; பரிசுத்த நகரம் ஒலிவமலைமேல் இறங்கும்.
2. துன்மார்க்கர் உயிர்த்தெழுவார்கள்; பரிசுத்த நகரத்தைத் தாக்குமாறு துன்மார்க்கரைச் சாத்தான் தூண்டுவான்.
3. துன்மார்க்கர் நியாயத்தீர்ப்படைந்து, பரலோக அக்கினியால் அழிக்கப்படுவார்கள்.
4. சுத்திகரிக்கப்பட்ட பூமியின் சாம்பலின்மேல் புதிய வானம் புதிய பூமியை தேவன் சிருஷ்டிப்பார்.

### பாதாளம்

வெளிப்படுத்தல் 20:1 இல் உள்ள 'பாதாளம்' பற்றி பலர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். 'அபுஸோஸ்' எனும் கிரேக்க வார்த்தைதான் அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'நரகம்' என்று பொருள்படும் 'அபிஸ்' (abyss) எனும் ஆங்கில வார்த்தை இதிலிருந்து தோன்றியதுதான். சிருஷ்டிப்புக்குமுன் ஒழுங்கில்லாமல், அந்தகாரமாக இருந்த பூமியைச் சுட்டிக்காட்ட கிரேக்கப் பழைய ஏற்பாட்டில் இந்த வார்த்தைதான் வருகிறது. 'பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது'. ஆதியாகமம் 1:1,2. 'அபுஸோஸ்' எனும் வார்த்தை மீண்டும் லூக்கா 8:31 இல் வருகிறது; பிசாசுகள் யாரையும் ஆட்கொள்ளவோ, ஆட்டிப்படைக்கவோ முடியாத ஒரு நிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

1000 வருட அரசாட்சியின்போது, 'ஜனங்களை மோசம்போகாதபடிக்கு' சாத்தான் சூழ்நிலைக் கைதியாகிறான். வெளிப்படுத்தல் 20:3. சங்கிலி எனும் பொருளால் அசாதாரணமான ஒரு ஜீவியைக் கட்டிவைப்பது சாத்தியமல்ல. மக்களே இல்லாமல் இருந்தால்தான், யாரையும் அவன் பாவஞ்செய்யத்தூண்ட முடியாத நிலை இருக்கும். இயேசு வரும்போது, துன்மார்க்கர் அழிக்கப்படுவார்கள்; நீதிமான்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்; சாத்தானும் அவன் தூதர்களும் இந்தப் பூமியில் தாங்கள் பாவஞ்செய்யத் தூண்ட யாருமே இல்லாத சூழ்நிலைக்கைதியாகிறார்கள்; தாங்கள் சுற்றித்திரிந்த, தங்கள் கலகத்தின் விளைவை 1000 வருடங்கள் காண்பார்கள். யுகம்நெடுகிலும் அதுபோன்ற ஒரு மோசமான சூழ்நிலைச் சங்கிலியை யாரும் அனுபவித்திருக்க மாட்டார்கள். இப்படித்தான் சாத்தானும் அவன் தூதர்களும் கட்டப்படுகிறார்கள். 'அவர்கள் கெபியில் ஏகமாய்க் கட்டுண்டவர்களாகச் சேர்ந்து, காவலில் அடைக்கப்பட்டு, அநேக நாள் சென்றபின்பு விசாரிக்கப்படுவார்கள்.' ஏசாயா 24:22.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com